# 13ஆம் திருத்தம் நாட்டுக்கு அவசியம்! விரைவில் மாகாண சபைத் தேர்தல்!!

### நாடாளுமன்றில் ஜனாதிபதி அறிவிப்பு

நாட்டின் வளர்ச்சிக்கும் எதிர்காலத்துக்கும் ஏற்ற வகையில் 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டியதன் அவசியத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று நாடாளுமன்றத்தில் ஆற்றிய விசேட உரையில் வலியுறுத்தினார்.

இதனை அடைவதற்கு திறந்த மனதுடன் விரிவான கலந்துரையாடல்களை நடத்தி, நாடாளுமன்றத்தின் அனைத்து உறுப்பினர்களிடையேயும் ஒருமித்த கருத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும், என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இன்று நாடாளுமன்றத்தில் விசேட உரையாற்றிய ஜனாதிபதி, 13 ஆவது திருத்தத்தில் உள்ள குறைபாடுகளை நாங்கள் பார்க்க வேண்டும். ஏனைய நாடுகளின் அதிகாரப் பகிர்வை நாங்கள் ஆராய வேண்டும். வருடாந்தம் மாகாண சபைகளுக்கு 500 மில்லியன் ரூபா செலவிடப்படுகின்றது. அதனால் நன்மைகள் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். ஆனாலும், 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தைப் புறந்தள்ள முடியாது. எனவே அது தொடர்பான எனது யோசனைகளை நான் முன்வைத்துள்ளேன். நாடாளு மன்றம் அதனை ஆராய்ந்து தீர்மானமொன்றை எடுக்க வேண்டும்.

மாகாண சபைகள் ஊடாக மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். எனவே, அரசமைப்பைத் திருத்தம் செய்து மக்களுக்கு ஏற்ற வகையில் தீர்மானமொன்றை எடுத்தல் 2 ➤



மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 22 புதன்கிழமை 09.08.2023 கதிர் 46

செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
YouTube தளம்

## 2024 முற்பகுதியில் தேர்தல் ஜனாதிபதி ரணில் முடிவு!

2024 ஆம் ஆண்டின் முற்பகுதியில் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு ரணில் விக்கிரமசிங்க தீர்மானித்துவிட்டார் என்று அரசியல் வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

இது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுடன் அவர் ஆலோசனை நடத்தியுள்ளார் எனவும், விரைவில் மொட்டுக் கட்சியினருடனும் சந்திப்பை நடத்தவுள்ளார் எனவும் அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

மாகாண சபைத் தேர்தலை முதலில் நடத்தி, அதில் அரசுக்குப் பின்னடைவு ஏற்பட்டால் அது ஜனாதிபதித் தேர்தல் முடிவில் 2 ➤

## ஜனாதிபதி நல்ல முடிவுகளை எடுத்தால் ஆதரவு வழங்கத் தயார் - சஜித் அறிவிப்பு



ஜனாதிபதி நல்ல முடிவுகளை எடுத்தால், எதிர்க்கட்சி என்ற வகையில் நாம் முழுமையான ஒத்துழைப்பினை வழங்குவோம், என எதிர்க் கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றியபோதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இன்று எந்தவொரு மாகாணசபைக்கும் மக்கள் பிரதிநிதிகள் இல்லை. இந்த நிலையில், 13 ஐ யாருக்காக நாம் நிறைவேற்றப் போகிறோம்?

தேர்தலுக்கு தற்போது நாட்டில் 2 ➤

## சீமெந்துத் தொழிற்சாலைக்கு எதிராக கிளிநொச்சியில் தொடரும் போராட்டம்



கிளிநொச்சி பூநகரி பொன்னாவெளி சீமெந்துத் தொழிற்சாலைக்கு எதிரான மக்கள் போராட்டம் இன்று ஏழாவது நாளாகவும் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

அனைத்து மக்கள் ஒன்றியத்தால் வேரவில், வலைப்பாடு, கிராஞ்சி ஆகிய கிராமங்கள் இணைந்து சீமெந்து தொழிற்சாலைக்கு எதிராக நடத்தும் சுழற்சி முறையிலான கவனவீர்ப்புப் போராட்டத்தின் ஏழாவது நாள் போராட்டமானது வேரவில் வைத்தியசாலைக்கு அருகில் இன்று இடம்பெற்று வருகிறது.

பொன்னாவெளி எனும் பழைமை வாய்ந்த கிராமத்தில் 2 ➤

## கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இனப்பிரச்சினைக்குத் தீர்வினைக் காண்போம்!

### நாடாளுமன்றில் மனோ கணேசன் வலியுறுத்து



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேசிய இனப்பிரச்சினை பற்றியும், 13ஆவது திருத்தம் பற்றியும் திரும்பத் திரும்பக் கூறினாலும்கூட, அரசாங்கப் பக்கத்தில் உள்ள எம்பிக்கள் அதற்கு ஆதரவளிக்கிறார்களா? என்ற சந்தேகம் எமக்குள்ளது. அதுபற்றி நாம் தெரிந்துகொள்ள விரும்புகிறோம், என நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவருமான 2 ➤

## ஜனாதிபதியின் முயற்சிகளுக்கு பொதுஜன பெரமுன தடையாம்!

### தயாசிறி எம்.பி. குற்றச்சாட்டு



ஜனாதிபதி எடுக்கும் முயற்சிகளுக்கு, அரசாங்கத்தின் பிரதான கட்சியாக இருக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன எதிர்ப்பினை வெளியிட்டு வருவதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றிய அவர், ஜனாதிபதி செய்யும் முயற்சிக்கு அரசாங்கத்தின் பிரதான கட்சியாக இருக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன 2 ➤

## யாழில் காலை நேர தனியார் வகுப்புகளால் பாடசாலைக் கற்றல் செயற்பாடுகள் பாதிப்பு!

### அரச அதிபருடனான கூட்டத்தில் சுட்டிக்காட்டு

தனியார் கல்வி நிறுவனங்களில் நடத்தப்படும் காலை நேர வகுப்புக்களால் பாடசாலைக் கற்றல் செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படுவதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நேற்றை தினம் யாழ் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற யாழ்ப்பாண மாவட்ட மட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுக் கூட்டத்திலேயே பாடசாலை அதிபர்களால் இந்த விடயம், அரச அதிபர் மற்றும் அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

தனியார் கல்வி நிறுவனங்களால் காலை 6 மணியளவில் வகுப்புக்கள் ஆரம்பித்து நடாத்தப்படுவதாகவும், அதற்குச் சென்று வரும் மாணவர்களால் உரிய நேரத்திற்குப் பாடசாலைக்குச் சமூகம் தர முடியாமல் இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டது. அதே நேரம், அதிகாலையிலேயே வகுப்புக்குச் செல்வதால் பல மாணவர்கள் காலை உணவை உட்கொள்வதைத் தவிர்ப்பதாகவும், அவர்களில் பெரும்பாலானவர்கள் பாடசாலைக்கு வரும்போதும் 2 ➤

# இலங்கையிலிருந்து வெளிவரும் மாலை செய்தி இதழ்

## ரமழான் மாத குர்ஆன் விளக்கப் பயிற்சிநெறியில் தேர்ச்சி பெற்றவர்களுக்கான சான்றிதழ் வழங்கல்






(எம்.எப். நவாஸ்)

அக்கரைப்பற்று பிரதேச செயலக கலாசாரப் பிரிவினால் புனித ரமழான் மாத குர்ஆன் கற்கையும் அதற்கான விளக்கமும் என்ற பயிற்சிநெறியில் பங்குபற்றிய மாணவர்கள், வளவாளர்கள் மற்றும் இதற்குப் பங்களிப்புச் செய்த தனவந்தர்களுக்கும் நினைவுச் சின்னமும் சான்றிதழ்களும் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு அக்கரைப்பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில், அக்கரைப்பற்று உதவிப் பிரதேச செயலாளர் ராசித் எஹியா தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக அக்கரைப்பற்று வலயக்கல்விப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் எம்.எம். சித்தி பாத்திமா, பள்ளிவாசல் தலைவர் எஸ்.எம்.சபீஸ், அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ஏ.எல். தௌபீக், தலைமைப்பீட முகாமையாளர் அஷ்ஷேக் எம்.ஜே.எம்.நிஹ்மத்துல்லாஹ், உதவி திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் துறை சார்ந்தவர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## கிழக்கு அபிவிருத்தி குறித்து சம்பந்தனுடன் ஆளுநர் பேச்சு



கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெருந் தலைவர் இரா. சம்பந்தனுடன் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் கலந்துரையாடியுள்ளார்.

சம்பந்தன் எம்.பியைக் கொழும்பில் உள்ள அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் இன்று மரியாதை நிமித்தம் சந்தித்த கிழக்கு மாகாண ஆளுநர், மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகள் குறித்து கலந்துரையாடியுள்ளார்.

## சினோபெக்கிற்கு எரிபொருள் நிரப்பு நிலையங்களை வழங்குவதில் சிக்கல்!

இலங்கையில் எரிபொருளை இறக்குமதி செய்து விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்ட சினோபெக் நிறுவனத்திற்கு எரிபொருள் நிரப்பு நிலையங்களை வழங்குவது சிக்கலாக மாறியுள்ளதாகவும் இதற்கான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படுவதும் இதுவரையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை எனவும் எரிபொருள் விநியோகஸ்தர்கள் தெரிவிக்கின்றனர்.

150 எரிபொருள் நிரப்பு நிலையங்களை சினோபெக் நிறுவனத்திடம் ஒப்படைக்க அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ள நிலையில், அவற்றை மாற்றுவதற்கு தயாரிக்கப்பட்ட ஒப்பந்தத்தில் உள்ள சட்டச் சிக்கல்களை சுட்டிக்காட்டிய விநியோகஸ்தர்கள், அவற்றில் பெரும்பாலான எரிபொருள் நிரப்பு நிலையங்கள் தனியாருக்குரியவை எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

சினோபெக் இந்த மாதத் தொடக்கத்தில் முதல் இரண்டு பங்குகளாக 42,000 மெட்ரிக் தொன் எரிபொருளை இறக்குமதி செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (கோ)

## 13ஆம் திருத்தம் நாட்டுக்கு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவசியம். மாகாண சபை முறைமையை அரசமைப்பிலிருந்து நீக்கிவிடக் கூடாதென்பது ஏகமானதான கருத்தாக இருக்கின்றது. இது வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு மட்டுமல்ல நாட்டின் அனைத்து மாகாணங்களுக்கும் பொதுவானது.

மக்களுக்குத் தேவைப்படும் வகையில் இதனை மாற்றியமைக்க வேண்டியதாக இருக்கின்றது. மாகாண சபைச் சட்டத்திலும் திருத்தங்களைச் செய்ய வேண்டும். மாகாண சபைத் தேர்தலை இதன் பின்னர் நடத்த வேண்டும்.

இதர அதிகாரங்கள் குறித்து முதலில் பேசி, பின்னர் பொலிஸ் அதிகாரங்கள் குறித்துப் பேசுவோம். இலகுவான விடயங்களை முதலில் ஆராய்ந்து பின்னர் கடினமான விடயங்களை ஆராய்வோம். உலகளாவிய ஆதரவுடன் ஒருமித்த கருத்தை எட்டுவதன் மூலம், தேசம் தனது அடையாளத்தைப் பாதுகாக்கவும் ஒற்றுமையை மேம்படுத்தவும் அதிக அதிகாரங்களைப் பரவலாக்கவும் முடியும்.

எடுக்கும் ஒவ்வொரு முடிவையும் எதிர்ப்பது என்ற பாரம்பரிய நடைமுறையில் இருந்து எதிர்க்கட்சிகள் விலகிச் செல்ல வேண்டும், - என்று தெரிவித்துள்ளார். (03)

## ஜனாதிபதி நல்ல முடிவுகளை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடமில்லை. சர்வகட்சி மாநாட்டின்போது நாம் தேர்தலை நடத்துமாறு வலியுறுத்தினோம்.

மாகாணசபைத் தேர்தலை முதலில் நடத்த வேண்டும். 2 மாகாணங்களுக்கும் மட்டுமன்றி, 9 மாகாணங்களுக்கும் தேர்தலை நடத்த முன்வர வேண்டும்.

மக்கள் ஆணை கிடைத்தவுடன், மாகாணசபைக்கான உறுப்பினர்களையும் இணைத்துக் கொண்டு, 13 தொடர்பாகக் கலந்துரையாட முடியும்.

134 பேரின் ஆணையுடன்தான் ஜனாதிபதி நாடாளுமன்றில் நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதிக்குக் கீழ் தான் அமைச்சரவை உள்ளது. எனவே, தனக்குப் பெரும்பான்மை இல்லை என்று ஜனாதிபதி கூற முடியாது.

எதிர்க்கட்சியாக இருக்கும்போது ஜனநாயகத்திற்காக நீங்கள் குரல் கொடுத்தீர்கள். இது ஜனாதிபதியான பின்னர் இல்லாமல் போகக்கூடாது.

நீங்கள் நல்ல முடிவுகளை எடுத்தால், எதிர்க்கட்சி என்ற வகையில் நாம் முழுமையான ஒத்துழைப்பினை வழங்குவோம், என்றும் எதிர்க் கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ கூறியுள்ளார்.

## 2024 முற்பகுதியில் தேர்தல் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாக்கம் செலுத்தும் என்பதாலேயே ஜனாதிபதித் தேர்தலை முதலில் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதன்பின்னரே மாகாண சபைத் தேர்தல் மற்றும் பொதுத்தேர்தல் என்பன இடம்பெறும் என்று முடிவாகியுள்ளதாகத் தெரிகிறது. (03)

## சீமெந்துத் தொழிற்சாலைக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சீமெந்துத் தொழிற்சாலைக்கான சுண்ணக்கல் அகழ்வை மேற்கொள்வதற்கு டோக்கியோ சீமெந்து நிறுவனம் ஆய்வுகளை மேற்கொண்டு பணிகளை முன்னெடுக்கவுள்ள நிலையில், பொதுமக்கள் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கடந்த வாரம் ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டிருந்தனர்.

அதன் தொடர்ச்சியாகவே இன்றும் சுழற்சி முறையிலான கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

கடற்கரைக்கு அருகில் உள்ள கிராமங்களில் சுமார் 300 மீற்றர் வரையான ஆழத்தில் சுண்ணக்கல் அகழ்வு மேற்கொள்ளப்படும்போது அதன் விளைவாக தங்களது கிராமங்களுக்குள் கடல் நீர் வரும் எனவும் அதனால் தாங்கள் கிராமங்களை விட்டு வெளியேற வேண்டிய நிலைமை ஏற்படும் என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர்

அத்துடன் தொழிற்சாலைக் கழிவுகள் காரணமாக மோசமான நோய்த்தாக்கங்களுக்கும் பொதுமக்கள் முகம்கொடுக்க வேண்டிய சூழ்நிலைகள் உருவாகும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதன் காரணமாக கடற்கரையில் அமைந்துள்ள தங்களது கிராமங்களில் சுண்ணக்கல் அகழ்வு நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டாம், எனத் தெரிவித்து கவனவீர்ப்புப் போராட்டத்தை அவர்கள் முன்னெடுத்துள்ளனர். (க)

## கிடைத்திருக்கும் சந்தர்ப்பத்தைப் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றிய அவர், மஹிந்த ராஜபக்ச 13 பிளஸ் நிலைப்பாட்டில் உள்ளவர் என்று பிரசன்ன ரணதுங்க கூறினார். அதை இங்கிருக்கும் அவர் மறுக்கவில்லை. எனவே, அவர் அந்த நிலைப்பாட்டில்தான் உள்ளார் என்று நினைக்கிறோம். அவ்வாறெனில், அந்த நிலைப்பாட்டில் உறுதியாக இருங்கள்.

ஒருதரம் பிளஸ் என்கிறீர்கள். பின்னர் மைனஸ் என்கிறீர்கள். பிறகு ஒன்றுமில்லையென்கிறீர்கள். அப்படிச் சொல்லக்கூடாது.

யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட 2009 இல் உங்களைச் சந்தித்தபோது, தற்போது யுத்தத்தை முடித்தவராக நீங்கள் மக்கள் மத்தியில் மகாநாயக்கராக இருக்கிறீர்கள். எனவே, சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அதிகாரத்தைப் பரவலாக்கி அரசியல் பிரச்சினைக்குத் தீர்வினைக் காணுமாறு வலியுறுத்தினோம்.

ஆனால், நீங்கள் செய்யவில்லை. இப்போது மீண்டும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

தற்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும், இனப்பிரச்சினைக்கு சரியான தீர்வு கிடைக்குமானால் தாம் அதற்கு ஒத்துழைப்பு வழங்குவதாகக் கூறியுள்ளார். அவர் காலை வாரிவிடவில்லை.

இலங்கை வரலாற்றில் எதிர்க்கட்சியொன்று இவ்வாறு கூறியிருப்பது இதுதான் முதல் தடவை.

எனவே, கிடைத்திருக்கும் வாய்ப்பைப் பயன்படுத்தி இந்தப் பிரச்சினையை நாம் இப்போதே தீர்த்துவிடுவோம். நாம் அனைவரும் ஒருமித்த நிலைப்பாட்டுக்கு வரத் தயாராகவுள்ளோம், எனக் குறிப்பிட்டுள்ளார்.

## ஜனாதிபதியின் முயற்சிகளுக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெரமுன எதிர்ப்பினை வெளியிட்டுள்ளது.

எனவே, இந்தச் செயற்பாடு ஜனாதிபதியின் தனிப்பட்ட விருப்பமா? அல்லது அரசாங்கத்தின் நிலைப்பாடா? என தெரிந்துகொள்ள விரும்புகிறோம்.

ஜனாதிபதியின் இந்த யோசனைகள் தொடர்பாக பொதுஜன பெரமுனவின் நிலைப்பாடு என்ன? இதற்கான பதிலை அந்தக் கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ச தெரிவிக்கவேண்டும்.

அதேநேரம், வடக்கு - கிழக்கில் உள்ள சிங்கள மக்களின் கருத்துக்களையும் இந்த விவகாரத்தில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

அப்படியானால் நாம் முழுமையான ஒத்துழைப்பினை வழங்கத் தயாராக உள்ளோம், என குறிப்பிட்டுள்ளார். (க)

## யாழில் காலை நேர .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உணவைக் கொண்டுவர முடியாதவர்களாக உள்ளதாகவும், எனவே மாணவர்கள் சோர்வுற்று மயங்கிவிழும் நிலை காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டப்பட்டது.

அத்தோடு, 2023 ஆம் ஆண்டு உயர்தரப் பரீட்சையைக் குறிவைத்து தனியார் பகல் வகுப்புகளும் நடத்தப்படுவதால் பாடசாலைக்கு உயர்தர மாணவர் வருகை குறைவாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் யாழ் மாவட்ட அரச அதிபரால் எடுக்கப்பட்ட நடவடிக்கையின் காரணமாக வெள்ளி மற்றும் ஞாயிறு தினங்களில் தனியால் வகுப்புகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இதனால், கடுமையான அழுத்தத்துக்கு மத்தியில் மாணவர்களுக்கு விடுதலை கிடைத்துள்ளது. இதனை, அவர்களது செயற்பாடுகளில் அவதானிக்க முடிவதாகவும், இதற்காக அரச அதிபருக்கும், அதிகாரிகளுக்கும் சம்பந்தப்பட்ட அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதாகவும் பாடசாலை அதிபர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# யாழ்ப்பாண மாவட்ட மட்ட சிறுவர் அபிவிருத்தி குழுக்கூட்டத்தில் பல முக்கிய தீர்மானங்கள்!

யாழ்ப்பாண மாவட்ட மட்ட சிறுவர் அபிவிருத்தி குழுக்கூட்டம் நேற்று செவ்வாய்க்கிழமை மாவட்டச் செயலகக் கேட்போர் கூடத்தில் மாவட்டச் செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தலைமையில் இடம் பெற்றது.

ஆசிரியர்களுக்குரிய மனித உள்ளார்ந்த வளம் சம்பந்தப்பட்ட பயிற்சிகள் தேவை எனத் தெரிவித்த மாவட்டச் செயலாளர், வேலணை மத்திய மகாவித்தியாலயத்தில் ஆசிரியர்களுக்கு முதல் கட்டமாக இது தொடர்பான பயிற்சி வழங்கப்படவுள்ளது என்றும் தெரிவித்தார்.

சிறுவர் அபிவிருத்தி எனும்போது, பாடசாலை மட்டத்தில் ஆசிரியர்களுக்கு உளவளப் பயிற்சி தேவை. நாளாந்த செயற்பாடுகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் உளவளப் பயிற்சி, தலைமைத்துவப் பயிற்சி போன்றவை வழங்கப்படவேண்டும்.

மாகாணக் கல்விப் பணிப்பாளருடன் இது தொடர்பில் கதைத்திருந்தேன். தனியார் நிறுவனத்தின் ஊடாக இந்தப் பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். வலயக் கல்விப் பணிப்பாளர், பாடசாலை அதிபர்கள் போன்றோர் குறித்த விடயத்திற்கு ஒத்துழைக்க வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

இதேவேளை, யாழ்ப்பாண மாவட்டத்தில் பிரதேச செயலகம் வாரியாக தனியார் கல்வி நிறுவனங்களின் விபரங்களைச் சேகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், இதில் சேகரிக்கப்படும் விபரங்களை அடிப்படையாகக் கொண்டு தனியார் கல்வி நிறுவனங்களுக்கான பொறிமுறை மற்றும் கட்டுப்பாடுகளை வகுக்கலாமென்றும் இந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அதேவேளை, யாழ்ப்பாண மாவட்டத்தில் காணப்படும் சிறுவர் இல்லங்கள் தொடர்பாக உரிய கண்காணிப்பை மேற்கொள்ளவும் யாழ் மாவட்ட செயலகக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

ஒரு சில சிறுவர் இல்லங்கள் மாவட்டச் செயலக அதிகாரிகளின் கண்காணிப்பு நடவடிக்கைக்கு ஒத்துழைப்பதில்லை என கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (01)

# அம்பாறை மாவட்டத்தில் நடந்த எய்ட்ஸ் தடுப்புக் குழுக் கூட்டம்



(நூருல் ஹுதா உமர்)

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பணிப்பாளர் டொக்டர் ஐ.எல்.எம். றிபாஸின் வழிகாட்டலுக்கும் ஆலோசனைக்கும் அமைவாக, பாலியல் நோய்கள் தடுப்புப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.என்.எம். தில்ஸானினால் அம்பாறை மாவட்ட எய்ட்ஸ் தடுப்புக் குழுக் கூட்டம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கேட்போர் கூடத்தில் நேற்று நடத்தப்பட்டது.

கல்முனைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சார்பில் பிரதிப் பணிப்பாளர் டொக்டர் எம்.பீ அப்துல் வாஜித் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், அம்பாறை மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பிரதிநிதிகளும், கல்முனைப் பிராந்திய திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.சீ.எம்.மாஹிர் உள்ளிட்ட பிரிவுத்தலைவர்களும் பாலியல் நோய்களுக்கான விசேட வைத்திய நிபுணர் பியூமி பெரேரா, அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோரோடு பொலிஸாரும் ஏனைய அரச நிறுவனங்களின் பிரதிநிதிகளும் பங்குபற்றினார்கள்.

கூட்டத்தின் இறுதியில் நடைபெற்ற பலதரப்புக் கலந்துரையாடலின்போது பாடசாலை மட்டத்தில் நடைபெறுகின்ற பாலியல் துஷ்பிரயோகங்களைக் கட்டுப்படுத்தி, விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை முன்னெடுப்பதுடன் பிராந்தியத்தில் காணப்படுகின்ற பாலியல் தொற்றுக்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் பற்றியும், போதுமான சட்ட நடவடிக்கைகளை நாடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

# கிழக்கு ஆசிரிய வாண்மை விருத்தி உலக வங்கியின் உதவியுடன் திட்டம்



(வி.ரி. சகாதேவராஜா)

கிழக்கு மாகாணத்தில் ஆசிரியர்களின் வாண்மை விருத்திக்காக உலக வங்கி உதவியுடன் திட்டம் ஒன்று அமல்படுத்தப்பட்டு வருகிறது.

பாடசாலை மட்ட ஆசிரியர் வாண்மை அறிவிருத்தி திட்டம் என்ற பெயரின் கீழ் இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது.

முன்னோடியாக மூதூர், பட்டிருப்பு, சம்மாந்துறை ஆகிய மூன்று வலயங்களில் இத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இதன் முன்னேற்ற நிலை தொடர்பாக ஆராய்வதற்காக நேற்று செவ்வாய்க்கிழமை மூன்று வலயங்களுக்கும் கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் செல்வி அகிலா கனகசூரியம், மேலதிக மாகாணக் கல்விப் பணிப் பாளர் எம்.எம். ஜவாத், பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆர்.நிமலரஞ்சன் ஆகியோர் விஜயம் செய்து அதிபர் மற்றும் கல்வி சார் அதிகாரிகளுடன் கலந்துரையாடலை நடாத்தினார்கள்.

சம்மாந்துறை வலயத்திற்கான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டமும் சம்மாந்துறை முஸ்லிம் மகளிர் கல்லூரியில் வலயக்கல்விப் பணிப்பாளர் கலாநிதி உமர் மௌலானா தலைமையில் நடைபெற்றது.

இன்று முதல் வகை மூன்று (டைப் 3) பாடசாலைகளுக்கு இத்திட்டத்தை அமல்படுத்துவதற்காக 15,000 ரூபாய் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டதோடு, ஏலவே, ஏனைய வகையைச் சார்ந்த பாடசாலைகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமையும் நினைவுபடுத்தப்பட்டது.

மேலும், ஆசிரியர் ஓய்வறை என்பது இனிமேல் ஆசிரியர் அபிவிருத்திப் பிரிவு என்று மாற்றப்பட வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

எதிர்வரும் 18 ஆம் திகதி பட்டிருப்பு வலயத்திற்கும் பத்தொன்பதாம் திகதி சம்மாந்துறை வலயத்திற்கும் இறுதிக்கட்ட மதிப்பீட்டிற்காக தமது குழுவினர் வருகை தருவார்கள் என்றும், உலக வங்கியின் ஏற்பாட்டின் பேரில் பிறிதொரு நிபுணத்துவ மதிப்பீட்டுக் குழுவும் இரண்டு வாரங்களில் இந்தப் பாடசாலைகளுக்கு விஜயம் செய்ய இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# நாகசாகி அணுகுண்டுத் தாக்குதல் 78 ஆவது நினைவு தினம் இன்று



ஜப்பானின் நாகசாகி நகரம் மீது அணுகுண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டு இன்றுடன் 78 ஆண்டுகள் கடந்துள்ளன. அந்தத் தாக்குதலில் இறந்தவர்களுக்கான நினைவு தினம் அங்கு அனுசரிக்கப்பட்டுள்ளது.

1945 ஆம் ஆண்டு இரண்டாம் உலகப்போரின் போது ஹிரோஷிமா மீது முதல் அணுகுண்டுத் தாக்குதலை நடத்திய அமெரிக்கா, 3 நாட்கள் கழித்து அதாவது ஓகஸ்ட் 9 ஆம் திகதி நாகசாகி நகரத்தின் மீதும் மற்றுமொரு அணுகுண்டை வீசியிருந்தது.

இந்த 2 தாக்குதல்களிலும் 2 லட்சத்து 15 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

உலகை உலுக்கிய இச்சம்பவத்தின் நினைவு தினம் இன்று அனுசரிக்கப்படுவதையொட்டி, இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் முகமாக நாகசாகியில் அமைதி மணி ஒலிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் காணொளி வாயிலாக உரையாற்றிய ஜப்பான் பிரதமர் புமியோ கிஷிடா, அணு ஆயுதம் இல்லாத உலகை உருவாக்க ஜப்பான் தொடர்ந்து போராடும் என்று தெரிவித்துள்ளார். (மி)

# அமேசான் பகுதிகளில் காடழிப்பு தொடர்வதாகக் குற்றச்சாட்டு!



அமேசான் காட்டுப்பகுதியைப் பகிர்ந்து கொள்ளும் எட்டு நாடுகள் காடழிப்பை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான ஒப்புக் கொள்ளப்பட்ட இலக்கை எட்டவில்லை என்று குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

குறித்த நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் பிரேசிலின் பெலெம் நகரத்தில் நேற்று இரண்டு நாள் உச்சிமாநாட்டில் சந்திந்துள்ளனர். கடந்த 14 ஆண்டுகளில் அவர்கள் முதல் முறையாக ஒன்று கூடியுள்ளனர்.

கூட்டுப் பிரகடனத்தின் மூலம் காடழிப்பை எதிர்த்து ஒரு கூட்டணி உருவாக்கப்பட்டுள்ளது. ஆனால், ஒவ்வொரு நாடும் அதன் சொந்தப் பாதுகாப்பு இலக்குகளைக்கூடத் தொடரவில்லை என்று சுட்டிக்காட்டப்படுகிறது.

அமேசானைப் பாதுகாப்பது காலநிலை மாற்றத்தைச் சமாளிக்கும் முயற்சிகளின் மையப் பகுதியாகும் என்று ஆய்வாளர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

நடைபெற்ற உச்சிமாநாட்டிற்கு முன்னதாக, பிரேசில் ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ லூலா டா சில்வா 2030 ஆம் ஆண்டளவில் காடழிப்பை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான பொதுவான இலக்குக்கு அழைப்பு விடுத்தார். இது பிரேசில் அரசாங்கம் ஏற்கனவே ஏற்றுக்கொண்ட கொள்கையாகும்.

உலகின் மிகப்பெரிய மழைக்காடுகளான அமேசானின் 60 சதவீதம் பிரேசிலில் உள்ளது. பொலிவியா, கொலம்பியா, ஈக்வடோர், கயானா, பெரு, சுரினாம் மற்றும் வெனிசுலா ஆகிய நாடுகள் அமேசானின் மீதப் பகுதியைப் பகிர்ந்து கொள்கின்றன.

குறித்த மாநாட்டில், பிரேசில் ஜனாதிபதி லூயிஸ் இனாசியோ லூலா டா சில்வா தனது தொடக்க உரையில், காலநிலை நெருக்கடியின் கடுமையான பாதிப்பு குறித்தும் சகாப்தத்தின் சவால்கள் தொடர்பிலும் அவற்றிலிருந்து மீண்டெழும் வாய்ப்புகள் குறித்தும் ஒற்றுமையாக செயல்பட வேண்டியதன் அவசியம் குறித்தும் பேசியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

காடழிப்பு நடவடிக்கைகளால் உலகம்முழுவதிலுமுள்ள அனேக நாடுகளில் தற்போது அதிகரித்த வெப்பநிலை நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான காடழிப்பு நடவடிக்கைகள் மேலும் மேலும் தொடர்ந்தால் இன்னமும் வெப்பநிலை அதிகரித்துக்கொண்டே செல்லும் என்று ஆய்வாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர். (மி)

# நியூசிலாந்து அரசாங்கத்தின் புதிய திட்டம்

காலநிலை மாற்றத்தைச் சமாளிக்கும் வகையில் 100 சதவீதம் புதுப்பிக்கத்தக்க மின்சாரப் பாவனையை எட்டிய முதல் நாடாக மாற்றுவதற்கு நியூசிலாந்து அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதற்காக காலநிலை மாற்றத் தொழில்நுட்பத்தில் உலகின் மிகப்பெரிய முதலீட்டு நிறுவனமான பிளக்ரொக் என்ற தனியார் நிறுவனத்துடன் இணைந்து பணியாற்றுவதற்கு தாம் தயாராக உள்ளதாக நியூசிலாந்துப் பிரதமர் கிறிஸ் ஹிப்கின்ஸ் அறிவித்துள்ளார்.

காற்று, பசுமை ஐதரசன் மற்றும் சூரிய ஆற்றலைப் பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கப்பட்டால் காபன் உமிழ்வு குறைக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் மூலம் அந்நிய முதலீடு அதிகரித்து நாட்டின் பொருளாதாரம் மேம்படும். எனவே, இந்தத் திட்டத்துக்காக சுமார் 1.2 பில்லியன் அமெரிக்க டொலர் நிதி ஆரம்பகட்டமாக ஒதுக்கப்பட்டுள்ளதாக அந்த நாட்டின் எரிசக்தித்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. (மி)

# இம்ரான்கானுக்காக போராட்டத்தில் குதித்த 200க்கும் மேலான ஆதரவாளர்கள் கைது!



இலஞ்ச ஊழல் வழக்கில் பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கானுக்கு மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து கைதுசெய்யப்பட்ட இம்ரான் கான், பஞ்சாப் மாகாணத்தின் அட்டோக் சிறையில் தண்டனைக்காக அடைக்கப்பட்டுள்ளார்.

இம்ரான் கான் கைதுசெய்யப்பட்டதைக் கண்டித்து அவரது கட்சியான பாகிஸ்தான் தெஹ்ரீக் இ இன்சாப் கட்சியினர் போராட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

பஞ்சாப் மாகாணத்தின் பல்வேறு பகுதிகளில் போராட்டத்தில் ஈடுபட்டதாக இதுவரை 200 க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர். (மி)

# பாலியல் தொந்தரவு குறித்து மிஸ் யூனிவர்ஸ் போட்டியாளர்கள் முறைப்பாடு



மிஸ் யூனிவர்ஸ் இந்தோனேஷியா அழகுராணிப் போட்டியில் பங்குபற்றிய யுவதிகள் சிலர், தாம் பாலியல் தொந்தரவுகளுக்கு உட்படுத்தப்பட்டதாக பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

மிஸ் யூனிவர்ஸ் இந்தோனேஷியா 2023 அழகுராணி போட்டிகளின் இறுதிச்சுற்றுக்கு முன்னதாக நடைபெற்ற உடல் சோதனையின்போது போட்டியாளர்கள் தமது மேலாடையை அகற்றுமாறு கோரப்பட்டனர் என அவர்களின் சட்டத்தரணி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து தமக்குக் கிடைத்த முறைப்பாடுகளின் அடிப்படையில் விசாரணை நடத்தப்படும் என ஜகார்த்தா நகர பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தோனேஷியாவில் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு 15 வருடங்கள் வரையான சிறைத்தண்டனை விதிக்கப்படலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

குற்றச்சாட்டுகள்தொடர்பாக முறைப்பாடு செய்யப்பட்டதை சட்டத்தரணி மெலிசா ஆங்ராயினி உறுதிப்படுத்தியுள்ளார். 3 போட்டியாளர்களை அவர் பிரதிநிதித்துவப்படுத்துகிறார். அதேவேளை, மேலும் பல முறைப்பாட்டாளர்கள் முன்வரக்கூடும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இக்குற்றச்சாட்டுகள் குறித்து விசாரணை நடத்தப்படும் என மிஸ் யூனிவர்ஸ் இந்தோனேஷியா அமைப்பும் உலகளாவிய மிஸ் யூனிவர்ஸ் அமைப்பும் தெரிவித்துள்ளன. (கோ)

# இயக்கச்சிப் பகுதியில் தொடரும் சட்டவிரோத மணல் அகழ்வு நிலம், நீர் வளங்கள் சிதைவடைவதாக பிரதேச மக்கள் கவலை




பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இயக்கச்சிப் பகுதியில் தொடரும் சட்டவிரோத மணல் அகழ்வால் பிரதேச மக்கள் அச்சமடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்ட பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த தங்களது இயக்கச்சி ஊரானது, சட்டவிரோத மணல் அகழ்வோரால் சிதைந்து சின்னாபின்னமாவதாகவும் கிராம மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கடல் மட்டத்தில் இருந்து வெறும் ஒன்றரை மீற்றர் உயரமே கொண்ட இயக்கச்சி பிரதேசத்தின் ஆற்றுச் சமவெளிப் பகுதிகளில் இருந்து தொடர்ச்சியாக ஆயிரக் கணக்கான லோட் மண் அகப்பட்டு, யாழ்ப்பாணத்தை நோக்கிக் கொண்டு செல்லப்படுவதாக அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

குறித்த மணல் அகழ்வை உடனடியாகத் தடுக்காவிட்டால் இயக்கச்சி என்ற பாரம்பரியப் பிரதேசம் உப்புத் தரவையாக மிக விரைவில் மாறி அழிவடையும் எனவும், யாழ் குடாவின் பெரு நிலப்பரப்பானது ஒரு தீவாக மாறி மக்கள் வாழத் தகுதியற்ற வறள் நிலப்பகுதியாக மாறும் பேரபாயம் ஏற்படும் எனவும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். ஈழத்திலேயே மிகச்சிறந்த பி.எச் அளவுடைய நீர் வளத்தைக் கொண்ட ஊரான இயக்கச்சியின் நீர்வளம், இந்த மண் அகழ்வு காரணமாக குடிப்பதற்கே தகுதியற்ற உவர் நீராக மாறி வருவதாகவும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

எனவே, குறித்த விடயத்தை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனத்திற் கொண்டு, அங்கு நடக்கும் மணல் அகழ்வைத் தடுத்து தருமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (02)

# நல்லூர் திருவிழா காலத்தில் யாசகத்தில் ஈடுபடத் தடை!

யாழ்ப்பாணம், ஒக். 09

நல்லூர் கந்தசுவாமி கோயில் மஹோற்சவ திருவிழாவில் குழந்தைகளை வைத்து யாசகத்தில் ஈடுபட தடைவிதிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்ட மட்ட சிறுவர் அபிவிருத்தி குழுக் கூட்டம் செவ்வாய்க்கிழமை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன் தலைமையில் இடம் பெற்றபோது சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டது.

திருவிழா நேரங்களில் வெளிமாவட்டங்களில் இருந்து வருகை தருவோர், ஆலய வீதிகளில் குழந்தைகளை வைத்து யாசகத்தில் ஈடுபடுவதைத் தடுக்கும் முகமாகவே குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

இது தொடர்பாக யாழ்ப்பாண மாவட்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் மற்றும் யாழ்ப்பாண தலைமை அலுவலக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஆகியோருக்கு அறிவிக்கவும் தீர்மானிக்கப்பட்டது. (01)




# கொழும்பில் மின்சாரம் தாக்கி தமிழ் மாணவி ஒருவர் மரணம்

கொழும்பு – கொலன்னாவைப் பிரதேசத்தில் நேற்று மாலை மின்சாரம் தாக்கிப் பாடசாலை மாணவியொருவர் உயிரிழந்துள்ளார்.

பிரத்தியேக வகுப்புக்குச் செல்வதற்காக ஆடையை அழுத்துவதற்கு மின்னழுத்தியைப் பயன்படுத்தியபோதே அவர் மின்சாரம் தாக்கி மரணமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் பிரபல பெண்கள் பாடசாலையில் தரம் 10 இல் கல்வி கற்கும் சுரேந்திரன் கவிதா என்ற 15 வயதுடைய மாணவிக்கே இந்த விபத்து நடந்துள்ளது.

அவரின் சடலத்தைக் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் ஒப்படைத்த பொலிஸார், சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (01)

# மரத்துடன் ஹயஸ் மோதி இளம் தம்பதியினர் சாவு!

இந்தச் சம்பவம் அனுராதபுரம் – இராஜாங்கனைப் பிரதேசத்தில் இன்று அதிகாலை 2 மணியளவில் இடம்பெற்ற

வாகன விபத்தில் இளம் தம்பதியினர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

அவர்கள் பயணித்த ஹயஸ் வாகனம் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியின் அருகில் இருந்த மரத்துடன் மோதியுள்ளது. இதன்போது வாகனத்தைச் செலுத்திச் சென்ற 28 வயதுடைய கணவர் சம்பவ இடத்திலேயே சாவடைந்துள்ளார். படுகாயங்களுடன் அம்புலன்ஸ் வாகனத்தில் இராஜாங்கனை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட 26 வயதுடைய மனைவி இடைவழியில் உயிரிழந்துள்ளார்.

இருவரினதும் சடலங்களும் இராஜாங்கனை வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ள நிலையில், விபத்து தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

உயிரிழந்த இளம் தம்பதியினர் அனுராதபுரம் – பலுகஸ்வெவை பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் என்று ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (03)

# நெடுந்தீவுக் கடற்பரப்பில் கைதான 9 இந்திய மீனவர்களும் விடுதலை!

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறிப் பிரவேசித்து மீன்பிடியில் ஈடுபட்டமைக்காக நெடுந்தீவுக் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 9 பேரும் விடுதலை செய்யப்பட்டனர்.

ஊர்காவற்துறை நீதிவான் நீதிமன்றத்தில் நீதிவான் ஜெ.கஜநிதிபாலன் முன்னிலையில் மீனவர்கள் 9 பேரும் நேற்று ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது, 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 18 மாத கால சாதாரண சிறைத்தண்டனை எனும் நிபந்தனையின் கீழ் 9 இந்திய மீனவர்களும் விடுதலை செய்யப்பட்டனர். (03)

# தற்போதும் தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் சிவாஜிலிங்கமே!



தமிழ்த் தேசியக் கட்சிக்குள் சில விவகாரங்கள் உள்ளமை உண்மை. ஆனால், அது கட்சிக்குள் பேசப்பட்ட கட்சிக்குள் தீர்க்கப்படக்கூடிய விவகாரங்கள்.

## சிறீகாந்தா தெரிவிப்பு

சிவாஜிலிங்கமே தற்போதும் கட்சியின் பொதுச்செயலாளர். தேவையெனில் கட்சியின் தேசிய மாநாட்டில் அதில் மாற்றங்கள் வரலாம்- இவ்வாறு தெரிவித்தார் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் என்.சிறீகாந்தா.

தமிழ்த் தேசியக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.கே.சிவாஜிலிங்கம் பதவியிலிருந்து நீக்கப்பட்டார் என்று முன்னர் தகவல்கள் பரவின. பரவிய சில மணி நேரங்களிலேயே அந்த விடயம் மறுக்கப்பட்டது.

இந்த நிலையில் அந்தக் கட்சியின் தேசிய அமைப்பாளர் நிசாந்தன், சிவாஜிலிங்கம் நீக்கப்பட்டது உண்மை என்று நேற்று செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்திக் கூறினார்.

இதைத் தொடர்ந்து அந்தக் கட்சியின் தலைவர் என்.சிறீகாந்தாவிடம் தொடர்பு கொண்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

சிவாஜிலிங்கத்துக்கு மதிப்புக்குரிய கடந்தகால வரலாறுள்ளது. அவர் சொல்லும் ஒரு விடயத்தின் தர்க்கம் பற்றி கேள்வியெழுப்பலாம். ஆனால், அவரின் கட்சி விசுவாசம் பற்றி சந்தேகம் எழுப்ப முடியாது.

கட்சிக்குள் சில விவகாரங்கள் இருப்பது உண்மை. ஆனால், இந்த நிமிடம் வரை சிவாஜிலிங்கமே கட்சியின் பொதுச்செயலாளர். நான்தான் தலைவர். கட்சியின் விவகாரங்கள் பற்றி ஏதாவது தகவல் இருந்தால் இருவரில் ஒருவர் உத்தியோகபூர்வமாக அறிவிப்போம்.

கட்சியின் தலைமைக்குழுவில் சில முறை கூடி சில விவகாரங்களைத் தீர்க்க முயன்றோம். அது கட்சிக்குள் நடக்கும் விவகாரம். அது பகிரங்கப்படுத்த வேண்டியதில்லை என்பதால் ஊடகங்களுக்கு வெளியிடவில்லை. இந்த விடயங்கள் கட்சிக்குள்ளேயே எம்மால் தீர்க்கப்படும், என்றும் என்.சிறீகாந்தா தெரிவித்தார். (O3)

# சேவை நலன் பாராட்டு நிகழ்வு!

(நூருல் ஹுதா உமர்)

அம்பாறை மாவட்ட செயலக பிரதம பொறியியலாளராக பதவியுயர்வு பெற்றுச்செல்லும் கல்முனை கல்வி மாவட்ட பொறியியலாளர் ஏ.எம். ஸாஹிர் அவர்களை பாராட்டி வழி அனுப்பும் நிகழ்வு கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹுதுல் நஜீம் தலைமையில் நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வலயக்கல்விப்பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீம் தலைமை உரையையும், சேவை நலன் உரையை நிகழ்த்தியதுடன், கணக்காளர் வை. ஹபீபுல்லாஹ், பிரதிக்கல்விப் பணிப்பாளர்களான பீ.ஜிஹானா ஆலிப், திட்டமிடல் பிரதிக்கல்விப்பணிப்பாளர் என். வரணியா ஆகியோர்களினாலும் சிறப்புரையும் நிகழ்த்தப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதிக்கல்விப்பணிப்பணிப்பாளர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், நிருவாக உத்தியோகத்தர், வலயக்கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.








இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.68, குறசெட் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 09.08.2023இல் வெளியிடப்பெற்றது.